MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சூல் நாவலில் முன்னோர் வழிபாட்டு விழுமியங்கள்

**முனைவர்.ஜெ.விக்ரன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ நேரு மகா வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி.கோவை
மின்னஞ்சல்: jai.vikram.j@gmail.com

# Ancestor worship values in the novel Shul

**Dr. J. Vikram**

**Assistant Professor, Tamil Department**
**Sri Nehru Maha Vidyalaya College of Arts and Science, Coimbatore**
**Email: jai.vikram.j@gmail.com**

## ABSTRACT

**Ancestor worship is a form of worship that has been practiced for centuries. We cannot see the deity we worship. But we have seen our ancestors and their grandparents. In this way, we worship them based on their experiences, which are related to us through kinship and descent. The worship of deceased ancestors can be found all over Tamil Nadu. The worship of the center stone among the Tamils is also related to its worship. The belief that the auspicious deeds done by a person are connected with his relatives even after his death is the basis of ancestor worship. Worshipping the person who was the reason for the emergence of the race also includes this practice. In our country, fasting on Divasam and Amavasya every year is related to ancestor worship. The purpose of this article is to examine how this form of worship has been described by So. Dharman in his novel Sool.**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**ஆய்வுச்சுருக்கம்**

முன்னோர் வழிபாடு, பன்னெடுங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிபாட்டு முறையாகும். நாம் வணங்கி வழிபடும் தெய்வத்தை பார்க்க முடிவதில்லை. ஆனால் நம்மை பெற்றவர்களையும் அவர்களைப் பெற்ற நமது தாத்தா-பாட்டிகளான முன்னோர்களையும் பார்த்திருப்போம். இப்படி உறவாலும் உதிரத்தாலும் நம்மோடு சம்பந்தப்பட்ட, அவர்களது அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு வணங்குவது முன்னோர் வழிபாடு. இறந்த முன்னோர் வழிபாட்டைத் தமிழகமெங்கும் காணலாம். தமிழரிடையே இருந்த நடுகல் வழிபாடும் அதன் வழிபாட்டோடு தொடர்புடையதாகும். ஒருவர் செய்த அருஞ் செயல்கள் அவர் இறந்த பின்பும் அவருடைய உறவினருடன் தொடர்பு பெறுகின்றன என்ற நம்பிக்கையே முன்னோர் வழிபாட்டிற்கு அடிப்படையாகும். இனத்தவர் தோன்றுவதற்குச் காரணமாகயிருந்தவரை வழிபடுவதும் இவ்வழிபாட்டில் அடங்கும். நமது நாட்டில் ஆண்டுதோறும் திவசம், அமாவாசையன்று நோன்பிருத்தல் முன்னோர் வழிபாட்டைச் சார்ந்ததாகும். இந்த வழிபாட்டு முறைமையை சோ. தர்மன் தனது சூல் நாவலில் எடுத்தியம்பியுள்ளதை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

ஆண்தெய்வம், வழிபாடு, முன்னோர், தெய்வக்கதைகள், சடங்குகள், நம்பிக்கைகள், வரலாறு.

**வழிபாடு சொற்பொருள் விளக்கம்**

வழிபாடு என்னும் சொல் வணங்குதல், தொழுதல், கீழ்படிதல்பொருளில் அமைகின்றன. வழிபடுதல் என்பது தெய்வ வழிபடுதலையும், பெரியவர்களை வழிபடுதலையும் குறிக்கும் தெய்வங்களை வழிபடுவதன் வழிபாடு சொற்பொருள் விளக்கம் வழிபாடு என்னும் சொல் வணங்குதல், தொழுதல், கீழ்படிதல் பொருளில் அமைகின்றன. வழிபடுதல் என்பது தெய்வத்தை வழிபடுதலையும், பெரியவர்களை வழிபடுதலையும் குறிக்கும். தெய்வங்களை வழிபடுவதன் மூலம் மனிதர்கள் குறிப்பிட்ட சில தன்மைகளை உறுதியாக பெறமுடியும்..

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

வழிபாடு என்ற சொல் ஆனது கௌவுரவம், கண்ணியம், வணக்கம், மதிப்பு என்ற பல பொருட்களை குறித்து நிற்கின்றன

சிலப்பதிகாரத்தில் வழிபாடு என்ற சொல் காணப்படுகிறது. இது சிறு, பெறு தெய்வ வழிபாடு என இரண்டு வகையினைக் கொண்டதாக அமைகின்றது.

**நீர்ப்பாய்ச்சியின் கதை கருப்பன் சாமி**

உருளை குடி கிராமத்தில் நீர்ப்பாய்ச்சி என்பவர்கள் பரம்பரை பரம்பரையாக கம்மாயை பாதுகாக்கவும், பராமரிக்கவும் இருந்து வருகிறார்கள் .இங்கு கருப்பன் என்னும் நீர் பாய்ச்சி வழக்கம் போல் மடிகளை திறக்க வரும்பொழுது கம்மாயில் மேல்மடை கீழ்மடி வழியாக வயலுக்கு பாயும் தண்ணீர் பாய்கிறது ஆனால் நடுமடை வழியாக தண்ணீர் வெளியேறவில்லை. இதனால் நடுமடை வழியாக பயனடைந்து வரும் வயல்கள் இதுவரை ஆவி உள்ளதென எந்த ஒரு தகுந்த முறையிலும் நிரூபிக்கப்படவில்லை. இது மனிதனின் ஒரு கற்பனை உருவாக்கம் எனலாம்.

> **'அப்ப கருப்பன் மடைக்குழிக்குள்ள பூந்துதான இந்த ஆவரங் குழைக்கட்ட இழுத்திருப்பான்.'**
>
> **உள்ள பூந்து கட்டப் புடிச்சு இழுத்து, வெளிய கொண்டாந் திருப்பான். அம்புட்டுத்தான மூச்சடக்க முடியும், பாவம் மூச்ச விட்டுட்டான். மூச்ச விட்டாலும் கட்ட விடலபாரு, விட்ருந்தா பழைய படியும் கெட்டு மடக் குழிக்குள்ளயே போயிருக்கும்.'**
>
> **கருப்பன் கெட்டிக்காரன், உசுரக் குடுத்து ஊர்ப் பசிய வெரட்டிட்டான். இல்லனா என்ன செய்ய முடியும் 1 (சூல்-66)**

உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக இருப்பது உணவு அந்த உணவின் தேவை அறிந்து தன்னை உயிரினை கூட பெரிதும் கருதாமல் மக்களுக்காக உயிர் தன்னுடைய உயிரை தியாகம் செய்தார் .அவரை ஊரில் உள்ள மக்கள் தெய்வமாக வழிபட்டார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**வழிபாட்டு முறை**

இங்கு ஒருபுறம் கண்மாயும் மறுபுறம் வயல்களும் அமைந்த இப்பகுதியில் காவல் தெய்வமாக விளங்கும் அய்யனாருக்கு சிலைக்கு அருகில் ஊர்மக்கள் கருப்பனின் சிலையை வைத்து அனைவரும் பொங்கல் வைத்து, படையல்கள் இட்டு கையெடுத்து கும்பிட்டு காவல் தெய்வமாக வழிபாடு செய்து வந்தார்கள்.

**கள்ளன் சாமி கதை**

உருளை குடி கிராமத்தில் நுழையும் கள்ளனுக்கு தாகம் ஏற்பட்டதால் அருகில் உள்ள பெண்ணிடம் தண்ணீர் கேட்டான் அந்தப் பெண் தண்ணீர் கொடுத்தால் அந்த தண்ணீரை வாங்கி கடுந்தாகத்திற்காக ஒரு செம்பு தண்ணீரையும் மூச்சு விடாமல் குடிக்கும் பொழுது பேச முடியாமல் போனது அப்போது அவனை அழைக்க முற்பட்டான் அவனுக்கு எதிரில் இல்லாமல் அவள் வீட்டுக்குள் செல்வதற்காக திரும்பி நின்றாள் அதனால் அவளைத் தோளை தொட்டு கூப்பிட்டான் அதனை தவறாக புரிந்து கொண்டு அவள் சத்தம் போட்டு ஊரை கூப்பிட்டால் அப்பொழுது ஊர் மக்கள் அனைவரும் கள்ளன் எண்ணி விரட்டினார்கள்.

அவன் தன்னுடைய உயிரினை காப்பாற்றிக் கொள்வதற்காக பனை மரத்தின் மேல் ஏறினான். அப்பொழுது ஊர் மக்கள் அனைவரும் பனைமரத்தின் கீழே அமர்ந்து அவனை பிடிக்கும் முற்பட்டனர் ஊர் மக்களின் இடம் சிக்காமல் தப்பிக்க கம்மாயின் வழியாக முற்படும்பொழுது ஊரின் காவல்தெய்வமாக விளங்கும் கருப்பனும், அய்யனரும் கம்மாயினை கடக்க முடியாமல் தடுத்தனர். அப்பொழுது கள்ளனின் உயிர் கம்மாயின் உள்ளே பிரிந்தது .சில காலம் கடந்த பின் தாழ்த்தப்பட்ட குடிப்பெண் சாமாயிக்கு பிரசவ வலி ஏற்பட்டு மயங்கி மல்லாக்க கீழே விழுந்தால்.

அப்பொழுது அதனைக் கண்ட அங்குள்ள பெண்கள் அனைவரும் கூட்டமாக அவளை சுந்தர் கூட்டத்தில் உள்ள இறுதி என்ற பெண் அலறினால் அப்போது கூட்டத்தில் அவர்கள் நீ யாரென்று கேட்டார்கள் நான்தான் கள்ளன் காரணம்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

இனிமே சக்கிலியக்குடி தெருவுல ஒரு பொம்பளகூட புள்ளப் பெற முடியாதுடா. கண்மாய்க்குள்ள மூச்சு முட்டி கையோஞ்சு, காலோஞ்சு, வயிறு முட்ட தண்ணியக் குடிச்சு எப்பிடிச் செத்தனோ அதே மாதிமீ டேய்... அதே மாதிரி ஒவ்வொரு பொம்பளையும் தெற சூலி யாவே சாவா. புள்ளத்தாச்சியா ஆகவிடமாட்டன். அபாண்டமா ஸ்ரீ வீண் பழியச் சொமத்தி என்னயச் சாகடிச்ச ஒங்க தெருவ கருவறுப்பண்டா.'

தெரியாம செஞ்ச குத்தத்துக்கு எல்லாச் சாமியும் இப்பிடிபழிவாங்க ஆரம்பிச்சிட்டா, மனுஷங்க எப்பிடி சாமி உசுர் வாழ்றது?"

> **'நான் சாமி இல்லடா, பேய்டா. நான் பேய்டா. ஒங்கள கருவறுக்க வந்த கள்ளன் பேய்டா.' (சூல்-ப71**) 2

## வழிபாட்டு முறைகள்

உருளை குடி கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் குலதெய்வமான ஊலி கருப்பன் கோயிலுக்குள்ளே கள்ளன்சாமியின் சிலையை வைத்தார்கள். பிறகு உளிக்கருப்பன் சாமிக்கு எப்பொழுதெல்லாம் திருவிழா நடத்துவார்களோ அப்பொழுது எல்லாம் கள்ளன் சாமிக்கும் திருவிழா நடத்துவார்கள் .இத்திருவிழா இரண்டு வருடத்திற்கு ஒரு முன் நடைபெறுகிறது அப்பொழுது எட்டயபுரம் மன்னர் நேரில் வந்து தரிசனம் கண்டு செல்வது வழக்கமாக இருந்தது. இக்காலத்தில் அதற்கு பதிலாக அரண்மனை பிரதிநிதி வந்து திருநீர் பெற்று செல்லும் சடங்கு இருந்து வருகிறது.

## கோவில் அமைப்பு

காலம் காலமாக பல வடிவங்களில் கோயில்களின் அமைப்பு காணப்படுகிறது .ஒவ்வொரு ஊரின் பழக்கவழக்கம் ,நம்பிக்கை ,வாழும் சூழலுக்கு ஏற்ப கோயில்கள் அமைகின்றது. சில கோயில்கள் கோபுர அமைப்புடனும், சில கோயில்கள் மேற்கூரை இல்லாமலும், இன்னும் சில கோயில்கள் ஒற்றைக் கல்லினை கூட வைத்து வழிபடக்கூடிய வழக்கம் மக்களிடையே இருந்து வருகிறது .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**நான்கு பக்கமும் நான்கு கல்தூண்கள். கூம்புவடிவக் கூரையைத் தாங்கிய படி. அதே போல் சிலையென்று எதுவும் கிடையாது. உளி வடிவத்தில் செதுக்கப்பட்ட ஒரு கல் நட்டு வைக்கப்பட்டிருக்கும். பார்ப்பவர் களுக்கு பருந்தின் வால் குப்புறப் புதைத்து வைக்கப்பட்டதைப் போல் தெரியும். கோவிலின் இடதுபுறம் சுமைதாங்கி கல். தினம் விழும் பூ மாலைகளை சுமந்தபடி வேண்டுதல்களாய் தொங்கும் தொட்டில்கள். கோவிலின் வலதுபுறம் வளர்ந்து நிற்கும் பால்மரம். தூரத்திலிருந்து பார்த்தால் பால்மரத்தில் பலாப் பழங்கள் காய்த்துத் தொங்குவதைப் போல் தெரியும். கிட்டத்தில் போய்ப் பார்த்தால் அத்தனையும் ஈன்ற**

**கால்நடைகளின் நஞ்சுக் கொடி வைத்து கட்டப்பட்ட பெட்டிகள்.**

**(சூல்.ப72). 3**

சூல் புதினத்தில் உளிக்கருப்பன் மற்றும் கள்ளன்சாமியின் கோவில் அமைப்பு இருந்து வருகிறது

**குறவன் சாமி கதை**

உருளைக்குடி கிராமத்தில் தூக்கண் வாழ்ந்து வருகிறான்.அவன் மக்களோடு மக்களாக மீன் பிடிக்க கம்மாய்க்கு சென்ற போது பல்வேறு விதமான மீன்கள் துள்ளி குதித்து விளையாடிக் கொண்டு இருந்தது .அப்போது அங்குள்ள மக்கள் அனைவரும் மின்வலைகளை கண்மாயில் வீசி மீன்களை பிடித்துக் கொண்டு இருந்தார்கள். தூக்கன் தன்னுடைய வலையை வீசி தீவிரமாக மீன்களை பிடித்துக் கொண்டு வலை நிரம்பியதால் அதை தரையில் கொட்டுவதற்காக கம்மையில் இருந்து கரைக்கு செல்லும் போது பெரிய குறவை மீன் கண்ணில் சிக்கியது.

அப்போது அதை வலையில் வைத்துக்கொள்ள முடியாததால் தன்னுடைய வலது கையில் வலையை வைத்துக்கொண்டு இடது கையில் குரவை மீனை எடுத்துக் கொண்டான். இன்னும் சற்று தூரத்தில் செல்லும்போது இன்னொரு குறவை மீனை கண்டான் அதை எப்படி கைப்பற்றுவது என்று தெரியாமல் தன்னுடைய வாயால் கவ்வி கொண்டான். அப்போது கூட்டத்தில் உள்ள அனைவரும் சிரித்தார்கள்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

'அட... அவக்காச்சி எடுத்த பச்ச மீனு திண்ணிப் பயல, ஒனக்கு கொஞ்சமாவது வெட்கம் இருக்காடா நாறப்பயல! டேய்... இங்கபாருங்கடா பச்ச மீனு திண்ணிப் பயல்.

தொரட்டி மாமா சத்தமாகச் சொல்லவும் சுற்றிலும் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் தூங்கனைப் பார்த்துச் சிரித்தார்கள். தூங்கனுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. பொங்கி வரும் சிரிப்பை அடக்க முடியாமல் இலேசாய் வாய் அசைத்தான். வாயின் கடி விலகிய குரவை பிடிநழுவி விழுக்கென்று வாய்க்குள் பாய்ந்து தொண்டைக்குள் இறங்கியது. தூங்கன் வேக வேகமாய் எட்டு வைத்து தண்ணீரைத் தாண்டி கரையில் போய் விழுந்து உருண்டான். இடது கையில் வைத்திருந்த வலைமீன்கள் கரையில் சிதறி தரையில் துள்ளின. தூங்கனும் துடித்துக்கொண்டும் மீனைப் போல துள்ளிக்

கொண்டும் தரையில் புரண்டான். கூட்டம் சுற்றி நின்றது. தூங்கனைத் தூக்கி நிமிர்த்தி உட்கார வைத்தது. **அவன் மூச்சுவிட முடியாமல் கண் நிலை குத்தி நிற்க, வாயை அகலத் திறந்து திறந்து மூடினான். கையை வாய்க்குள் திணித்து வாந்தியெடுக்க முயன்றான். வசமாக தொண்டையில் சிக்கிக்கொண்ட மீன் முழுவதுமாக தொண்டையை அடைத்துக்கொண்டது. இரு கண்களும் அகலத் திறந்திருக்க மூச்சுவிட முடியாமல் தூங்கன் சிறிது நேரத்தில் செத்துப் போனால்.(சூல்-81,82) 4**

தூக்கன் இறந்த பிறகு காரணம் இல்லாமல் உருளை குடி கிராமத்தில் உள்ள கண்மாயில் முதல் வருடத்தில் சிறிது மீன்களும், அடுத்த வருடத்தில் அதைவிட அதிக மீன்களும், அதற்கு அடுத்த வருடத்தில் கண்மாயில் உள்ள மொத்த மீன்களும் இறந்து விடுகின்றது. பின்னர் அந்தக் கம்மாயின் வழியாக யாரும் செல்ல முடியாத அளவிற்கு மாற்றம் வீசுகிறது ஊர் மக்களுக்கு காரணம் தெரியவில்லை அப்பொழுது ஊர் மக்கள் அனைவரும் அய்யனார் கோவிலுக்கு சென்று அங்குள்ள பூசாரியிடம் நீங்கள் இருப்பதற்கான காரணம் கேட்டனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

## குறி கேட்டல்

அருள் வந்து ஆடும் பூசாரியின் ஆவிலிருந்து தெய்வ வாக்கு வெளிவரும் அது இயல்பாகவோ மக்கள் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு நிகழும் .வாழ்க்கையில் ஏற்படும் மனக் கவலைகளை அவர்கள் போக்கிக் கொள்வதற்கும் பிரச்சனைகளில் இருந்து வெளிவருவதற்கும் சாமானிய மக்களுக்கு பூசாரிகளிடம் குறிப்பிட்டு ஒரு முக்கியமான நிகழ்வாக அமைகிறது எனில் அது மிகையல்ல.

அதற்கு பூசாரி இந்த பிரச்சனைக்கான தீர்வை சொல்ல தொடங்கினார் அப்போது நீர்ப்பாய்ச்சி பூசரினம் பல கேள்விகளை கேட்கிறான் உடனே பூசாரி இந்த ஊரும் இந்த கன்மாயும் என்னுடையது இதனை நான் தானே பார்க்க வேண்டும் நீங்கள் யாரும் இதை இனி கவலை கொள்ள வேண்டாம்.

> **'கொரவமீன் விழுங்கி, மூச்சுத் திணறி, கண் முழி பிதுங்கி, மீனப் போலவே துள்ளித் துள்ளிச் செத்தானே ஒரு எளவட்டம்...' ஆமா சாமி, நம்ம தூங்கன் பய.'(சூல்-83) 5**

அவன் தான் இதற்கு காரணம் என்று பூசாரி கூறினார். நீர் பாய்ச்சி உடனே நீங்களே சாமி அவனை கட்டுக்குள் கொண்டு வர முடியாதா

என்கிறான். அதற்கு சாமி என்னுடைய சக்தி நிலத்தில் தான் ஆனால் அவன் தண்ணிக்குள்ள இறந்ததுனால மச்சாவதா எடுத்து இருக்கா அதான் அவனை அழிப்பதற்கு என்னால் முடியவில்லை .இருந்தாலும் இந்த பிரச்சனைக்கான தீர்வு வேண்டும் என்பதற்காக அவனை அழைத்து கேட்டேன் அதற்காக மடைக்குடும்பனை போலவே என்னை வழிபாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறான் அதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் மடைக் குடும்பம் ஊர் மக்களுக்காக தன்னுடைய உயிரினை கொடுத்தவன் அதனால் அவனை வழிபடுகிறார்கள் நீ அப்படி இல்லை என்று குரவனிடம் கூறினேன். அதற்கு குறவன் மற்றொரு கோரிக்கை அய்யனாரிடம் கூறினான் உன்னருகில் கோவில் வைக்கவில்லை என்றாலும் உனக்கு எதிரில் உள்ள உடை மரத்தடியில் என்னை வைத்து வழிபடு செய்ய வேண்டும் என்று கேட்கிறான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

அதற்கு ஊர் மக்கள் அய்யனார் சாமியிடம் ஒத்துக் கொள்கிறார்கள். தூக்கணின் என்பவன் குறைவை மீனை விழுங்கியதால் அவனுக்கு கொறவன் சாமி என்று பெயரிட்டு உடை மரத்து அடியில் வைத்து வழிபட்டு வருகிறார்கள். காலப்போக்கில் கொறவன் சாமி என்னும் பெயர் மருவி குறவன் சாமியாக மாறியது. அய்யனார், கருப்பன் சாமி போன்ற குறவன் சாமியும் காவல் தெய்வமாக விளங்கினான். அவனுடைய சக்தியை கொண்டு ஊர் மக்களையும் நிறைபெருக்கான கண்மாயில் வாழும் உயிர்களையும் பாதுகாத்து வருகின்றான்.

**மகாலிங்கம் பிள்ளை சாமி கதை**

மகாலிங்கம் பிள்ளை வெற்றிலை பயிரிடும் ஒரு விவசாயி. உருளைக் குடியில் விளையும் வெற்றிலைகளை ஏற்றுமதி செய்யும் தொழிலையும் செய்து வருகிறார் .அவூரில் நடைபெறும் திருமண சடங்குகள், காதணி விழா, பெண்கள் பூப்பெய்தும் சடங்கு ,இறப்பு சடங்கு அனைத்து சடங்குகளுக்கும் மகாலிங்க பிள்ளை வெற்றிலை தான் உபயோகப்படுத்துகிறார்கள். வெற்றிகளை ராவுத்தரிடம் கொழுமுதல் செய்து வருகிறார். இவர் இருவருக்கும் இடையே உறவு நட்பு மட்டுமல்லாது அதற்குமேலாக மாமா மச்சான் என்று உறவு முறையோடு இருந்து வருகிறது. இவ்வாறு இருந்த நட்புக்கு இடையே ஒரு விரிசல் ஏற்பட்டது.

காரணம் என்னவென்றால் இவருடைய வெற்றிலை வெளுத்தும், காரமின்றியும், மொரமொரப்பு இன்றியும் இருப்பதனால் இவருடைய

வெற்றிலை சரியாக வியாபாரம் ஆகவில்லை ராவுத்தற்கு நஷ்டம் ஏற்பட்டது. இதனை எவ்வாறு மகாலிங்கம் பிள்ளையிடம் கூறுவது என்று தெரியாமல் மனம் வருந்து கொண்டிருந்தார் .அப்போது ராவுத்தர் மகாலிங்கம் பிள்ளையிடம் வெற்றிலையை கொளுமுதல் செய்வதற்காக வந்தபோது முகமலர்ச்சி இன்றி ராவுத்தர் காணப்பட்டதால் .ஏதோ பிரச்சனை என்று நினைத்துக் கொள்கிறார் .அதனை கேட்டபோது ராவுத்தர் வெற்றிலையின் குறைகளை கூறுகிறார் .அப்போது மகாலிங்கம் பிள்ளை இந்த பிரச்சினை சரி செய்யும் வரை தாங்கள் எந்த பணமும் கொடுக்காமல் வெற்றிலை ஏற்றிக் கொண்டு செல்லுங்கள் என்று கூறுகிறார் .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

இப்போதுதான் முதன்முறையாக மகாலிங்கம் பிள்ளையிடம் பணம் கொடுக்காமல் ராவுத்தர் வெற்றிலை ஏற்றிக்கொண்டு செல்கிறார்.

**ராவுத்தர் மாமா சொன்ன விஷயங்கள் மகாலிங்கம்பிள்ளையின் நெஞ்சில் முள்ளாய்த் தைத்தன. பல ராத்திரிகள் தூக்கமின்றிக் கழிந்ததுதான் மிச்சம். கொடிக்கால் தொழிலை தலைமுழுகி விட்டு வேறு சம்சாரித் தொழிலுக்குப் போவதென்றால், நினைக்கவேக வருத்தமாயிருந்தது. பரம்பரைத் தொழில், விட்டுவிலகுவது என்பது… நினைத்தவர் பெருமூச்சு விட்டுக்கொண்டார்.(சூல் -97) 6**

மனம் தளர்ந்து போகாமல் தன்னுடைய குறைகளை எவ்வாறு திருத்திக் கொள்வது என்று எண்ணி, காரம் சாரமான வெற்றியின் ரகசியத்தை தெரிந்து கொள்வதற்காக ஆத்தூர் நோக்கி தன் பயணத்தை மேற்கொண்டார். ஆத்தூர் சென்றார் ஆத்தூரில் உள்ள பெரிய நாடாரை சந்திக்கிறார். அவரிடம் அவருக்கே தெரியாமல் மகாலிங்கம் பிள்ளை தன்னை ஒரு முட்டாளாக மாற்றிக் கொண்டு பெரிய நாடரிடம் தனக்கு தேவையான ரகசியங்களை கேட்டார் .

இங்க கேளும் பிள்ளையவாள், ஆத்துத் தண்ணி, கொளத்துத் தண்ணி, கண்மாய்த் தண்ணி, ஊரணித் தண்ணி எல்லாமே மழத்தண்ணிதான். ஆத்துத் தண்ணி மலையில உற்பத்தியாகி வார தண்ணி. இதுல எல்லாத்துலயும் மண்டியும், மகுடும், தூசியும், செத்தையும் கலந்துதான் இருக்கும். சுத்தம்ங்கிறது கெணத்துத் தண்ணிதான்; வெத்தல வெளசாயத்தப் பொறுத்த வரையில ஆத்துத் தண்ணியும் வேணும், கெணத்துத் தண்ணியும் வேணும். அப்பத்தான் வெத்தலையில் காரம் இருக்கும், அத்தோட மெல்லுறத்துக்கு

கொஞ்சம் மொரமொரப்பும் வேணும், இல்லனா மண்ணத் தின்னது மாதிரி சப்புனு இருக்கும், வெத்தல வாயோட ஒட்டாது. (சூல்- 105,106) 7

இவ்வாறு தன் எண்ணி வந்த கொடிக்கால் ரகசியங்களை தன்னுடைய புத்திசாலி மூலமாக தெரிந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தார். ஆத்தூரில் இருந்து தன்னுடைய சொந்த ஊர் சென்று தன்னுடைய வயகாட்டில் தனியாக கிணறு தோண்டி கொண்டிருந்தார். அவரை அனைத்து மக்களும் எதற்காக என்று கேட்டனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

பதில் ஏதும் கூறாமல் ஆழமாக கிணறு தோண்டிக்கொண்டே இருந்தார்.

தெலாக் கம்பை இழுத்து குனிந்து தண்ணீர் மோந்து, நிமிர்ந்து வாய்க்காலில் ஊற்றினார். தொடர்ந்து ஊற்ற வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்தோடியது. வெள்ளை வெளேரென்று இருக்கும் கண்மாய் தண்ணீருக்கும், கண்ணாடியாய் மின்னி தேங்காய்த் தண்ணீராய் ஓடும் கிணற்றுத் தண்ணீருக்கும் வித்தியாசம் பார்த்தார். தேனியையும், பெரியகுளத்தையும், சோழவந்தானையும், ஆத்தூரையும் தான் ஜெயிக்கப் போவதை எண்ணி குதூகல மடைந்தார்.(சூல்-113) 8

பிறகு மகிழ்ச்சி அடைந்தார் ஆனால் மற்றொருபுறம் தான் ஆத்தூர் சென்று பொய் கூறிய ரகசியத்தை தெரிந்ததை எண்ணி குற்ற உணர்வு இருந்தது. அதோடு குமாரசாமி ரெட்டியார் கூறிய புராணக் கதைகளில் உள்ள செய்திகள் அறிந்து இன்னும் அதிகமாக மன வருத்தம் ஏற்பட்டது.

(மத்தியான வெய்யில், நாவறட்சியைப் போக்கவும் தண்ணீர் கொடிக்காலுக்குள் எவ்வளவு தூரம் பாய்ந்திருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளவும் பிள்ளையவாள் தண்ணீர் இறைப்பதை நிறுத்தினார். பெரிய நாடாரிடம் பொய் சொல்லி வித்தை கற்ற இறுமாப்புடன் சொருகு கல்லில் முழுப்பலத்தையும் இறக்கி சுவரின் மேல் குதித்து ஏற உன்னிக் குதித்து தாவினார். சொருகியிருந்த பலகைக் கல் இரண்டாக உடைந்துவிட்டது. அப்படியே நேராக செங்குத்தாய் தண்ணீருக்குள் விழ, ஒடிந்த கல் கத்திவசமாய் பிள்ளையவாளின் மண்டையைப் பிளந்தது. பிள்ளையவாளின் இரத்தம் வெற்றிலை எச்சாய் தண்ணீரில் படர கிணற்றுக்குள் அடங்கிப் போனார் மகாலிங்கம்பிள்ளை. (சூல்- 113) 9

வெற்றிலை சாகுபடி செய்யும் ரகசியத்தை தன்னுடைய இனத்தவர்களிடம் கூட கூறாமல் அந்த ரகசியமானது யாருக்கும் பயன் இல்லாமல் மண்ணோடு

மண்ணாக போனது. அவருடைய உடலானது வண்ணான் கிடங்கோரம் வயக்காட்டின் ஓரத்திலே அடக்கம் செய்தனர்.

**வழிபாட்டு முறைகள்**

உருளை குடி கிராமத்தில் கம்மாயின் காவல் தெய்வமாக கருப்பன்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

அய்யனார், குறவன் சாமி இருப்பது மட்டுமல்லாமல் வயலுக்கு காவல் தெய்வமாக மகாலிங்கம் பிள்ளை மாறினார்.மகாலிங்கம் பிள்ளை கோவிலை கொடிக்கால் பிள்ளை கோவில் என்று அழைத்தனர் .இங்கு நடவு செய்யும் பொழுதும், அறுவடை செய்யும் பொழுதும் பொங்கல் வைத்து மக்கள் அனைவரும் வழிபடுகின்றனர்.

**இருளப்பசாமி கதை**

உருளைக்குடி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வழிபடக்கூடிய தெய்வம் தான் இருளப்பசாமி. இந்த இருளப்பசாமியானது தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு பாதுகாக்கும் வெளியாகியுள்ளன திகழ்கிறது. இத்தகைய தெய்வத்தை எட்டையாபுரம் மன்னர் தன்னுடைய உயிரை பாதுகாப்பதற்காக தன்னுடைய வீரர்களை அனுப்பி எல்லப்பசாமியை அரண்மனைக்கு எடுத்து சென்று வருமாறு கட்டளையிடுகிறார். பின்னர் வீரர்கள் உருளைக்கிழங்கு கிராமத்திற்கு சென்று அங்குள்ள அடித்தட்டு மக்களை சந்தித்து மன்னனின் ஆணைக்கு இணங்க இருளப்சாமி எடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். இதனை பார்த்த அங்குள்ள மக்கள் இது மன்னரின் ஆணை என்பதனால் குழப்பமாகவும், மனவருத்ததுடனும் நின்று கொண்டிருந்தார்கள்.

ஆள் மாற்றி ஆள் தோண்டிக்கொண்டே இருந்தார்கள். ஆழம்கூடக்கூட வெளியில் தோண்டிய மண் பெருகிக்கொண்டே இருந்தது. முழங்கால் அளவு ஆழம் தோண்டியும் சிலை இம்மிகூட அசையவில்லை. கூடிநின்று அடிக்கடி அசைத்துப் பார்த்தார்கள். இலேசாக அசைவு கிடைத்துவிட்டால் போதும். அசைத்து அசைத்து சிலையைப் பிடுங்கி விடலாம் என்று அடிக்கொரு தரம் அசைத்துப் பார்த்தார்கள். மேலே குமிந்த மண் அம்பாரமாய் இடுப்புயரம் மேதிக் கிடந்தது. ஆனாலும் சிலை அசையவில்லை. மண்வெட்டி கடப்பாறைக்கு இதுவரையிலும் இடம் கொடுத்த கரிசல் மண் இப்போது கரும்பாறையாக தன்னை உருமாற்றிக்கொண்டது. சாமியின் கால் பாதங்கள்

கரும்பாறைக்குள் ஊடுருவி செங்குத்தாய் கீழிறங்கியது. காவலர்கள் தெரியும் பாறையை சுற்றிச்சுற்றி வந்தார்கள். கரும்பாறைக்குள்ளிருந்து முளைத்து வந்தவரைப் போல் கம்பீரமாக நின்றது இருளப்பசாமி. (சூல்-393) 10 இந்த நிலையில் வீரர்கள் அனைவரும் குழப்பமான மனநிலையில் இருந்தார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

அப்போது அதிலிருந்து ஒரு வீரவன் அங்கு தாழ்த்தப்பட்டுள்ள மக்களின் ஒருவனாக பரமனை பார்த்து இருளப்பசாமி வரலாற்றினை கேட்டார் .பிறகு இருளப்பசாமியானது ஆழமாக தோன்டும் பொழுது சாமியின் பாதம் பாறைகளும் ஒன்று போல இருக்கிறது என்றார். அதற்கு பரமன் இதை பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது முப்பாட்டர்களுக்கு மட்டுமே தெரிந்த உண்மை என்று சொன்னான். இந்த செய்தினை வீரர்கள் மன்னனிடம் கூறினார்கள்.

அப்போது மன்னன் கோபம் கொண்டு கேரளா மந்திரவாதியான குஞ்ஞான அழைத்தான் குஞ்சான் என்பவன் ஆவிகளை அடைக்கும் மந்திரவாதிகளில் ஒருவன். அவன் இருளப்பசாமி சிலையை பற்றி நன்கு அறிந்தவன். அதனால் சிலை பற்றிய விவரங்களை மன்னரிடம் எடுத்துரைத்தான்.

ஒரு ஆளோட காலடி மண்ண வச்சு என்ன வேணும்னாலும் -செய்யலாம், அந்த ஆளையே அவனோட காலடி மண்ண வச்சு பொம்மையாக்கியிறலாம், பொணமாவும் ஆக்கியிறலாம், புலம்பித் திரியும்படியாவும் ஆக்கியிறலாம். 'பிடிமண்' போயிருச்சுனா இங்க இருக்கப் போறது வெறும் கல்லுதான், சக்தி இருக்காது.'இருளப்பர் சுயம்புவாக முளைத்திருக்க வேண்டும். சுயம்பு என்பது அளவிட முடியாதது. ஆழமோ அகலமோ கிடையாது. பாதாளத்தைத் தாண்டியும் போகும். அசைக்க முடியாது. பிய்த்தாலோ உடைத்தாலோ மீண்டும் வளரும். உடைத்த பாகத்தை எடுத்து வந்தால் உருவம் மட்டுமே வருமே ஒழிய சக்தி வராது, ஏனெனில் சுயம்பும் சக்தியும் பிரிக்க முடியாதவை.(சூல்-396) 11 குஞ்ஞான் சுயம்பு தோன்றிய செய்தியை பற்றி மன்னரிடம் தெளிவாக கூறினான்.

**இருளப்பசாமி வழிபாடும்,சடங்கும்**

மக்கள் அன்றாட வாழ்வில் தெய்வத்திற்கு தான் முதல் அங்கீகாரம் கொடுத்து வழிபாடு மற்றும் சடங்குகள் செய்கிறார்கள். ஒவ்வொரு தெய்வத்திற்கும் பலவிதமான சடங்கு முறைகளை மேற்கொண்டு வருகின்றன.

புனிதத்தன்மையைப் பாதுகாக்கவும், அதற்குக் களங்கம் ஏற்படாமலிருக்கவும், தீயவற்றிலிருந்து தனிமைப்படுத்தித் தூய்மையாக வைக்கவும் மேற்கொள்ளப் படுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

(எடுத்துக் காட்டாக, தீர்த்தம் கொடுக்கும் பாத்திரம் மூலம் நீர் பருகுவதும் பூசையின்போது கற்பூரம் ஏற்றும் தட்டைக் கொண்டு அன்றாடம் உணவு உண்பதும் தவிர்க்கப்படுகிறது). அடுத்தது. புனிதத்தன்மையோடு தொடர்பு கொண்டு அதன் ஆற்றலைப் பெற்றுப் பயனடைய சடங்குகள் செய்யப்படுகின்றன. இறுதியாக புனிதத்தன்மையை மக்கள் இறைவன் என்னும் பெயரால் மனிக் உருவமாக்கியோ உணர்வுகளாக்கியோ வழிபட முற்படுவதால் இறைவனுக்கும் மனமுண்டு என எண்ணி இறைவனின் மனத்தை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செயல்களும் சடங்குகளாயின.(ப-524) 12

இப்புதினத்தில் உள்ள இருளப்பசாமிக்கு வருடத்தில் ஒரு முறை மகா சிவராத்திரி அன்று அவருக்கு வழிபாடு செய்யும்போது அந்த இருளப்பசாமி கால்மிதி செய்து போடுவார்கள். அக்கால்மிதியானது வருடம் முழுவதும் அவர் வேட்டையாடுவதற்கு பாதுகாப்பாக இருக்கும். மறுநாள் காலையில் பார்த்தால் இருளப்பசாமியின் கால்மிதியில் உள்ள மேல்வார் அறுந்து பாதத்தின் பகுதியில் மண் ஒட்டி இருக்கும் என்பது இவர்களுடைய சடங்கு முறையில் ஒன்றாகும். இந்த சடங்கு முறைகளை இக்குல மக்கள் அரண்மனையில் உள்ள அந்தணர் கூறிய வாக்கின்படி வருடம் தோறும் அரண்மனைக்குச் சென்று இருளப்பசாமியினை வழிபாட்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

**முடிவுரை**

சோ. தர்மன் தனது நாவல்களில் இப்பகுதிகளில் வாழும் மக்களின் மண் சார்ந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை முறையாக எடுத்துக் கையாண்டுள்ளார். அதிலும் குறிப்பாக சிறுதெய்வ வழிபாட்டு முறைமைக்கும், முன்னோர் வழிபாட்டு முறைமைக்கும் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து நாவலின் போக்கை நகர்த்தியுள்ளார். முன்னோர்கள் எப்படி கடவுளானார்கள். மக்களிடையே காலங்காலமாக கடைபிடித்து வரும் நம்பிக்கைகள் ஆகியவற்றை பற்றி கூறும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

சான்றெண் குறிப்புகள்.

1. நூல்- ப- 66
2. மேலது ப -71
3. மேலது ப - 72
4. மேலது ப - 81- 82
5. மேலது ப - 83
6. மேலது ப - 97
7. மேலது ப - 105- 106
8. மேலது ப - 113
9. மேலது ப - 114
10. மேலது ப - 393
11. மேலது ப - 396
12. மேலது ப - 524